இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 08-11-2025

# அறிவுத் திருவிழா!

மாண்புமிகு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி அவர்களின் முன்னெடுப்பால் தலைநகர் சென்னையில், வள்ளுவர் கோட்டத்தில் ‘அறிவுத் திருவிழா’ நடைபெற இருக்கிறது. அதனைக் கொள்கைத் திருவிழாவாக ஏற்பாடு செய்துள்ளார் துணை முதலமைச்சர்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோர் வழித்தடத்தில் இயக்கத்தையும், இயக்கத்துக்குக் கிடைத்த ஆட்சிப் பொறுப்பையும் வைத்து நல்லாட்சி நடத்தி வருகிறார் திராவிட நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞர் அவர்கள் இருந்து நடத்தினால் எத்தகைய அளவுக்கு கழகத்தை நடத்துவாரோ அதைப் போலவே நடத்தி வருகிறார் தலைவர்.

‘நான், எனது’ என்று கருதாமல் ‘நமது’ என்று அனைவரையும் உள்ளடக்கிய ‘திராவிட மாடல்’ ஆட்சியை நடத்தி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிமிக்க தமிழ்நாடாக உயர்த்திக் காட்டி வருகிறார். அதே வழியில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்று, சிறப்புத் திட்டங்கள் மூலமாக சிறப்பான தமிழ்நாட்டை உருவாக்கி வருகிறார்.

**‘திரும்பத் திரும்ப கொள்கையைப் பேசுங்கள்’ என்று தலைவர் கலைஞர் கட்டளையிட்டதை நிறைவேற்றி வருகிறார் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி. புதிய புதிய இளைஞர்களை கழகத்தில் சேர்த்து, அவர்களுக்கு கொள்கை உரம் ஊட்டி வருகிறார். கழகத்துக்கு எதிராக அவதூறுகள் முன்வைக்கப்பட்டபோது அதை முறியடிக்கும் விதத்தில் ‘பொய்ப் பெட்டி’ என்னும் நிகழ்ச்சிகளை நடத்தினார். நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கம், டெல்லியை எட்டக் காரணமாக அமைந்தார். பாசறைக்கூட்டங்கள், ‘முரசொலி’ பாசறை பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், ‘என் உயிரினும் மேலான’ என்கிற பேச்சுப்போட்டி, கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், கலைஞர் நிதிநல்கைத் திட்டம் என்று கொள்கையை விதைத்தபடியே இருக்கிறார் மாண்புமிகு உதயநிதி.**

அந்த வரிசையில்தான் ‘அறிவுத் திருவிழா’வை ஏற்பாடு செய்துள்ளார். இதில், ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்ற நூல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ( இன்று, நவம்பர் 8) வெளியிடப்பட உள்ளது. அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரம் ஆகிய நான்கு முக்கிய முனைகளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றிய, ஆற்றிவரும் பங்களிப்பை மொத்தமாகத் தொகுத்துச் சொல்வதாக இந்நூலை உருவாக்கி இருக்கிறார் துணை முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்களிப்பு பெருமளவில் அமைந்துள்ளதைத் தொகுத்துச் சொல்லி மலைப்பை ஏற்படுத்துகிறது இந்தத் தொகுப்பு.

1120 பக்கங்கள் கொண்ட இந்நூலில் கழகத் தலைவரின் செறிவான பேட்டியும், முன்னணியினரின் கடந்த கால நினைவுகளும் அருமையாகப் பதிவாகி உள்ளன. அகில இந்தியத் தலைவர்கள், தங்களது பார்வையில் கழகத்தின் பணியை அளவிடுகிறார்கள். பல்வேறு துறைகளின் அறிஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் தி.மு.க.வின் முன்னெடுப்புகளை, சாதனைகளை, விளைவுகளை அலசிச் சொல்கிறார்கள்.

‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ என்ற தலைப்பில் கண்காட்சியும் கருத்தரங்கும் நடைபெற இருக்கின்றன. பல்வேறு தலைப்புகளில் அறிஞர் பெருமக்கள் உரையாற்ற இருக்கிறார்கள்.

‘முற்போக்குப் புத்தகக் கண்காட்சி’ நவம்பர் 8 முதல் 16 வரை நடைபெறுகிறது. அரசியல் புத்தகங்களை வெளியிடும் 50 பதிப்பகங்கள் இந்தக் கண்காட்சியில் பங்கெடுக்கின்றன. அனைத்து நூல்களுக்கும் பத்து விழுக்காடு விலைத் தள்ளுபடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட இயக்கம் கலை, இலக்கிய இயக்கம் என்பதால் மாலை நேரம் முழுக்கவே கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளார் துணை முதலமைச்சர். புத்தர் கலைக்குழு, கோவன் கலைக்குழு, புதுகை பூபாளம் கலைக்குழு, நிகர் கலைக்கூடம் ஆகியவை கலை நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. ‘மந்திரமா? தந்திரமா?’ என்ற பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சியும் நடக்க இருக்கிறது.

**அரசியல், கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் மேன்மைக்காகத் தொடங்கப்பட்ட இயக்கத்தை அதே வேகத்தோடு, அதே விவேகத்தோடு, அதே உணர்ச்சியோடு, அதே அக்கறையோடு கொண்டு செலுத்த வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தோடு துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி அவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த ‘அறிவுத் திருவிழா’ திராவிட இயக்க வரலாற்றில் முக்கியமான நிகழ்வாக அமைய இருக்கிறது.**

“போர்க்களங்கள் மாறலாம், போர் தொடர்கிறது” என்கிறார் இளைஞர் அணிச் செயலாளர். போரும், போர்க்களமும் எத்தகையது என்பதை உணர்த்தப் போகிறது இந்த அறிவுத் திருவிழா.

‘நம்பிக்கைகளுக்கு அல்ல, அறிவுக்கு முக்கியத்துவம் கொடு’ என்று சொல்லும் இயக்கம் இது. அதனால்தான் இந்த இயக்கம், அடிப்படைவாதிகளால் விமர்சிக்கப்படுகிறது. ஆத்திரம் கொள்கிறார்கள். அவதூறுகளை வீசுகிறார்கள். பொய்களைப் பரப்புகிறார்கள். புனைவுகளை வரலாறு ஆக்குகிறார்கள். இவை எல்லாம் செய்கிறார்களே தவிர, அதற்கான விளைவுகள் ஏதுமில்லை. பதர்களாகவே போய்விடுகிறார்கள்.

**மக்கள் வளர்ச்சிக்கானதாக கொள்கை அமையும்போது அந்தக் கொள்கையை மக்களே காப்பாற்றுவார்கள் என்பதன் அடையாளம்தான் திராவிட இயக்கத்தின் இருப்பும், வெற்றியும். மக்களின் வேரில் திராவிடப் பூ பூக்கிறது. மலர்கிறது. காய்க்கிறது. கனியாக பலனை அந்த மக்களுக்கே தருகிறது. இந்தப் பிணைப்பை அறுக்கவே பிளவுவாதிகள் துடிக்கிறார்கள். காலம், உதயநிதிகளை உருவாக்குவதால் பிளவுவாதிகளின் எண்ணங்கள் நிறைவேறுவது இல்லை. நிறைவேறப் போவதும் இல்லை.**

அறிவுத் திருவிழாவில் பங்கேற்க வாருங்கள்! கொள்கைதான் இயக்கத்தின் வலிமை என்ற வகையில் நடைபெறும் அறிவுத் திருவிழா, உணர்ச்சித் திருவிழாவாக அமையட்டும்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிருவாகிகளை சந்திக்கும் நிகழ்வில், இராஜபாளையம் மற்றும் திருவாடானை சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிருவாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிருவாகிகளுக்கு புத்தகங்களையும் வழங்கினார்.

### உடல் உறுப்புத் தானம்; உலகிலேயே தமிழ்நாடுதான் முதலிடம்!

# கொடையாளர்களின் பெயர்கள் பொறித்த தியாகச் சுவர்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு திறந்து வைத்து மரியாதை!

*சென்னை, நவ. 8 -* உடல் உறுப்பு தானம் செய்த கொடையாளர்களின் பெயர்கள் பொறித்த தியாகச் சுவரை சென்னை இராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்து மரியாதை செய்தனர்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த ஒன்றையும் சொல்வதற்கு முன்னால் தாமே செய்து காட்டும் மிகச்சிறந்த மானுடப் பண்பில் உயர்ந்தவர். அந்த வகையில் முதலமைச்சர் அவர்கள் 2009 ஆம் ஆண்டே உடல் தானம் செய்துள்ளார் என்பது நாம் எல்லாம் நினைந்து பெருமைப்பட தக்க வரலாற்று நிகழ்வாகும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், அவரது துணைவியார் திருமதி துர்க்கா ஸ்டாலின் அம்மையார் அவர்களும், 2009 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28 ஆம் நாள் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் நடைபெற்ற ஒரு விழாவுக்காகச் சென்றிருந்தார்கள். அந்த விழா நிகழ்ச்சியின் இடையே இருவரும் தங்களுடைய வாழ்நாள் இறுதியில் உடல் தானம் வழங்குவதற்கான உறுதி மொழிப்படிவத்தில் கையெழுத்திட்டார்கள். அந்த மகத்தான நிகழ்வு அப்போது மிகப்பெரிய பாராட்டுகளையும் வரவேற்புகளையும் அவர்கள் இருவருக்கும் பெற்றுத் தந்தது.

அன்றைய நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “உடல் உறுப்புகளைத் தானம் செய்வது இன்று நேற்றல்ல கடந்த கால வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளது. மன்னர்கள், நாயன்மார்கள் உறுப்புகளைத் தானம் செய்துள்ளனர். கண்ணப்ப நாயனார் தனது இரண்டு கண்களையும் தானமாக வழங்கியதாகப் புராணம் கூறுகிறது. இன்றைய அறிவியல் வளர்ச்சி காரணமாக ஒருவர் உடலில் உள்ள உறுப்புகளை எடுத்து வேறு ஒருவருக்குப் பொருத்தி உயிர் வாழ வைக்கும் சம்பவங்கள் பெருகி வருகின்றன” என்று குறிப்பிட்டார்கள்.

“2008 செப்டம்பர் மாதம் திருக்கழுக்குன்றத்தைச் சேர்ந்த ஹிதேந்திரனுக்கு சாலை விபத்தில் மூளைச் சாவு ஏற்பட்டது. அவரது இதயம் மாற்று அறுவை சிகிச்சை மூலம் பெங்களூருவில் உள்ள ஒரு சிறுமிக்கு பொருத்தப்பட்டது. சென்னை மருத்துவர்களின் இந்த சாதனையை மறக்க முடியாது. அவரது பெற்றோரின் நற்செயலை நான் நேரில் அவர்களது வீட்டுக்குச் சென்று பாராட்டினேன். அவரது பெற்றோருக்குச் சுதந்திர தினவிழாவில் விருது வழங்கி அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறப்பித்தார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

**உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடலுறுப்பு தானம் செய்பவர்களைப் பாராட்டும் வகையில், கடந்த 2023 செப்டம்பர் திங்கள் 23ஆம் தேதி உடலுறுப்பு தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அந்தவகையில் உடலுறுப்பு தானம் செய்தவர்களின் திருவுடலுக்கு மாவட்ட ஆட்சி நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலர் போன்ற மாவட்ட அளவிலான அலுவலர்கள் அரசு மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

இந்தத் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபிறகு இதுவரை 253 பேர் உடலுறுப்பு தானம் செய்து, அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டிருக்கிறது. இப்படி இரண்டு ஆண்டுகளில் மட்டும் இவ்வளவு பேர் உடலுறுப்பு தானம் செய்திருப்பது என்பது இந்திய அளவில் தமிழ்நாடுதான் இன்றைக்கு முதலிடத்தில் இருக்கின்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்ததற்குப் பிறகு இந்திய அளவில் தமிழ்நாடு இத்திட்டத்திற்காக ஒன்றிய அரசின் பல விருதுகளை ஆண்டு தோறும் பெற்று வருகிறது. அந்தவகையில் கடந்த ஆண்டும் கூட அதிக அளவில் உடலுறுப்பு தானம் செய்தவர்கள் என்கின்ற வகையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்தது. இந்த திட்டம் அறிவித்தபிறகு இதுவரை உடலுறுப்பு தானம் பதிவு செய்திருப்பவர்கள் 23,189 பேர். இப்படி இந்திய அளவில் மட்டுமல்ல உலகளவில் இந்த சிறப்புக்குரிய திட்டத்திற்கு மேலும் நிறைவேற்றுகின்ற வகையில் தியாகச் சுவர் (*wall of honour*) நிறுவப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதிலும் இதுபோல் நிறுவப்படவிருக்கிறது.

இந்தத் தியாகத்தைப் போற்றும் மகத்தான தியாகச் சுவர் நிறுவப்பட்டு, நேற்று (7.11.2025) சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மேயர் திருமதி. ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராமன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் கார்த்திகேயன், செயற்பொறியாளர் அழகிரிசாமி, மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் பிறந்தநாள்!

## திருவுருவச் சிலைக்கு – அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்!

*சென்னை, நவ.8-* தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளான இன்று (8.11.2025) காலை 8.30 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

“தேம்பாவணி” என்னும் தமிழ்க் காப்பியத்தைப் படைத்து வழங்கியவர் வீரமாமுனிவர். இவர் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர். கிறித்தவ சமயத் தொண்டுக்காகத் தமிழகம் வந்து, தமிழின் சிறப்பினால் ஈர்க்கப்பட்டு, தமிழ்த் தொண்டராகவும் தமிழறிஞராகவும் ஆனார். கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பதே வீரமாமுனிவரின் இயற்பெயர். கிறித்தவ சமயப் பணி செய்வதற்காக, தமிழ் முனிவர்களைப் போலக் காவி ஆடை உடுத்தி அவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். கி.பி.1710இல் இந்தியாவுக்கு வந்த வீரமாமுனிவர் கோவா, கொச்சி, அம்பலக்காடு வழியாக, மதுரை மாவட்டம் இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள காமநாயக்கன் பட்டியை வந்தடைந்தார்.

தமது சமயப்பணி தமிழ்நாட்டில் வெற்றி பெற வேண்டுமெனில், தமக்குத் தமிழறிவு மிகவும் இன்றியமையாதது என்பதை நன்குணர்ந்து கொண்டார். இவர் தமக்கு முன்னால் தமிழகம் வந்து தமிழராகவே மாறி “தத்துவ போதகர்” எனப் பெயரை மாற்றிக் கொண்டு, தமிழ்ப்பணி புரிந்த இராபர்ட்டிநொபிலி என்னும் மேலைநாட்டு இறையடியாரைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவர் போலவே தாமும் இறைப் பணியைச் செய்திட விரும்பினார். அதனால், இவர் தமது பெயரைத் “தைரியநாதர்” என்று மாற்றிக் கொண்டார். பின்னாளில் மக்கள் இவரை வீரமாமுனிவர் என்றே அழைத்தனர்.

வீரமாமுனிவர் அவர்கள் தம் தாய்மொழி அல்லாத பிறமொழியில் இலக்கியம், இலக்கணம். அகராதி முதலிய அனைத்துத் துறைகளிலும் அரிய நூல்கள் பல படைக்கும் அளவுக்கு ஆற்றல் கொண்டவராக, உலக வரலாற்றிலேயே தனித்து நிற்பவருள் ஒருவராகத் திகழ்ந்தார்.

இத்தாலி நாட்டில் பிறந்து, தமது முப்பதாம் வயதிலேயே தமிழகம் வந்த அவர், இயேசுநாதரின் வரலாற்றைத் தமிழில் கூறும் “தேம்பாவணி” எனப்படும் காப்பியம் ஒன்றையும் இயற்றினார். தமிழில் சதுரகராதியைப் படைத்ததால், “தமிழ் அகராதியின் தந்தை” என்றும் போற்றப்படுகிறார். மேலும் அவர், திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம் மாள் அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களையும், தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலையும் எழுதியுள்ளார். திறக்குறளில் அறத்தையும் பொருளையும் இலத்தீன் மொழியில் பெயர்த்தவர்வீரமாமுனிவர்.

உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், பரமார்த்த குருகதை, வாமன் கதை ஆகிய நூல்களைப் படைத்தவர். இதில் பரமார்த்த குரு கதையானது தமிழில் முதல் முதலாக வந்த நகைச்சுவை இலக்கியம் ஆகும்.

தமிழ்நாட்டுக்கு வந்து தமிழராகவே வாழ்ந்த வீரமாமுனிவர் அவர்கள் 1747. ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலேயே இயற்கை எய்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “தமிழ் அகராதியின் தந்தை” வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய பெருமைகளைப் போற்றுகின்ற வகையில், தூத்துக்குடி மாவட்டம் காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவர் அவர்களுக்குத் திருவுருவச்சி சிலையுடன் கூடிய மணிமண்டபம் ஒன்றைப் புதிதாக அமைத்து, 22.1.2024 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்கள் பிறந்த தினமான நவம்பர் 8ஆம் நாள் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, இந்த ஆண்டு நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.




வடக்கு மண்டலம், வேலூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட, இரண்டு சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பார்வையாளர்கள், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர் – 2, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் வழக்கறிஞர்கள் ஆகியோர்களுக்கு வடக்கு மண்டல பொறுப்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு வாக்காளர்கள் சிறப்பு திருத்தம் குறித்து ஆலோசனைகள் வழங்கினார். உடன் வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர்ஆனந்த், எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் ப.கார்த்திகேயன் உட்பட கழக தோழர்கள் பலர் உள்ளனர்.